தமிழ் காங்கிரஸும் வெள்ளையறிக்கையும்.

# தமிழ்ப் பிரதிநிதிகளின் பாதகமான போக்கு.

## டைம்ஸ் பத்திரிகையின் விபரீதப் போக்கு

டாக்டர் இ. எம். வி. நாகநாதரின் கண்டனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க் காங்கிரஸும் வெள்ளையறிக்கையும்.

## தமிழர்களுக்கோர் எச்சரிக்கை.

### டைம்ஸ் பத்திரிகையின் போக்கு.

வெள்ளை அறிக்கை என்றைக்கு வெளிவந்ததோ, அன்றே உங்கள் பிரசாரக் கொள்கையும், போக்கும் மாறுதலடைந்துவிட்டது. இதைக்கண்டு வியப்படைவதற்கொன்றுமில்லை. உங்கள் போக்கிற்கு அது சரி. இதற்குக் காரணங்கள் என்ன? என்பதை நான் அறிவேனாகயினால் இதற்காக நான் உம்மைப் பாராட்டவும் செய்கிறேன். ஆனால் கடந்த மூன்றுவார காலமாக தமிழ் காங்கிரசின் திட்டங்களையும் கொள்கைகளையும் பலமாகத் தாக்கி, கிளர்ச்சியும் பிரசாரமும் செய்து வருகிறீர். தமிழ் காங்கிரசின் ஏகோபித்த தீர்மானத்திற்கு விரோதமாக அரசாங்க சபையில் சதி செய்த மூன்று அங்கத்தவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்து அவர்களை கங்கிரசிலிருந்து நீக்கியதைக் கண்டித்து எழுதிக் கொண்டிருக்கிறீர்கள். இதற்குப் பதில் தெரிவிக்க வேண்டியது என் கடமை. கண்ணியத்துடன் என்னுடைய பதிலை பிரசுரம் செய்வீர்களென்று எதிர்பார்க்கிறேன்.

### ஏன் ஆத்திரமும் அவசரமும்

இந்த வெள்ளை அறிக்கை பற்றி பொதுமக்கள் அபிப்பிராயங்கள் வெளியிடுவதற்குமுன், ஏதோ குடி முழுகிப்போய விடுவதுமாதிரி, இவ்விஷயத்தை ஆத்திர அவசரத்துடன் அரசாங்க சபையில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இப்படிச் செய்தது சர்வ சாதாரணமான ஜனநாயக சப்பிரதாயங்களுக்கு முற்றிலும் மாறானது என்பதை நீங்களும் ஒப்புக் கொள்வீர்கள். இந்த விவாதம் எப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டதென்பதையும் சற்று யோசனை செய்துப் பார்க்கவேண்டும். ஒரு தலைப பட்சமான பிரசாரம் தலைவிரித்தாடிய சமயம் இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் திரு. சேனநாயகா ஆடிப் பாடிப் புன்முறுவல் பூத்த முகத்துடன் மோஹன ராகத்தில் தக்க பக்க வாத்தியங்களுடன் ஆங்கிலேயர், சோனகர், பறங்கிகள் ஆகியோர்களை திருப்தி செய்யும் வகையில் சுருதி கூட்டி பல்லவி அனுபல்லவி, சரணங்களைப் பாடி முடித்துவிட்டார். நான் என்ன செய்யப் போகிறேன்? என்று தமிழன் ஏங்கும் நிலை ஏற்பட்டுவிட்டது.

இப்படிப்பட்ட சலன நிலையில் இருந்த தமிழ்ப் பிரதிநிதிகள் அவர்களுடைய தொகுதி வாக்காளர்களான மன்னார், காங்கேசன்துறை, பண்டாரவளை பிரமுகர்களை கலந்தாலோசிக்க அவகாசமில்லாமல் போய் விட்டது அவரவர் மனச் சாட்சியைத் தேட ஆரம்பித்து அது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்காமற் போகவே பகுத்தறிவைத் தேடினார்கள். சித்தம் போக்கு சிவன் போக்கு, ஆண்டிபோக்கு அதேபோக்கு என்று கும்பலில் கோவிந்தா! போட்டுவிட்டார்கள்

எத்தனை தரம் வாயடைத்தாலும் அடைபடாத விதண்டாவாதன் என்று என்னை அழைத்தாலும்சரி அல்லது போன நியாயஸ்தலங்களிலெல்லாம் வழக்கைத் தவிரவிட்டு மேல் கோர்ட்டு நாடி அப்பீல் செய்யும் கக்ஷிக்காரனென்று என்னை வர்ணித்தாலும் சரியே, நான் அழுத்தமாகச் சொல்வது என்னவென்றால் நீங்கள் போன போக்கும், போகிற போக்கும் அபத்தம். உங்களுடைய வாதங்களும் சரியானவையல்ல என்பதேயாகும். நீங்கள் காட்டும் ஆதாரங்கள், இல்லாத ஒன்றை இருப்பதாகச் சொல்லி போகாத ஊருக்கு வழி கேட்பதாய் இருக்கிறது

## இது எப்படி முடிவானதாக விருக்கும்?

முதலாவதாக இந்த வெள்ளை அறிக்கை முடிந்துபோன விஷயம் என்று சாதிக்கின்றீரே? அதுதான் இல்லை என்று நான் உமக்கு எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். இதற்கு முன்காலங்களில் மன்னர் சர்க்கார் பல தடவைகளில் வெள்ளை அறிக்கைகள் விடுத்து அதுவே முடிவானதாகும் என்றும் கூறிவிட்டு மறுபடி புனராலோசனை செய்து வேறு அறிக்கைகள் வெளியிட்டிருக்கிறார்கள். வெள்ளை அறிக்கைகளை பிரகடனப்படுத்துவதின் கருத்துத்தான் என்ன? நாட்டின் பொதுஜன அபிப்பிராயம் எப்படி இருக்கிறதென்பதைத் தெரிந்து கொள்வதற்காக அல்லவா? நாட்டில் மகா ஜனங்களின் அபிப்பிராயத்திற்கு நேர்மாறாக விருக்குமானால் ஏற்கனவே வெளிப்படுத்திய சிபார்சுகளை காலதேச வர்த்தமானத்திற்கேற்ப திருத்தி வெளியிடுவதுதான் அனுட்டானத்தில் நாம் கண்டவை. இதையொட்டியே "ஓர்டர் இன் கவுன்சிலும்" மன்னரின் அங்கீகாரமும் இருக்கும். இது மறுக்க முடியாத உண்மையல்லவா?

முதலில் வெளியிடப்பட்ட வெள்ளை அறிக்கையையொட்டி "ஓர்டர் இன் கவுன்சில்" பிரகடனமாகி ஊர்ஜிதப்பட்டாலும் நாட்டில் விசேஷக்கிளர்ச்சி தோன்றுமானால் அது மாறுதல் அடையும். இது ஆங்கில நாட்டுப் பாராளுமன்றத்தில் தொன்றுதொட்டு நடைமுறையில் அனுட்டிக்கப்பட்டு வரும் சம்பிரதாயம்.

## இதுவா ஜனநாயகம்?

அரசாங்க சபையில் வெள்ளை அறிக்கை விவாதத்திற்கு வந்த சமயத்தில் தனக்கிருக்கும்குறைகளையும் கஷ்ட நஷ்டங்களையும் அச்சம், தயை, தாட்சண்யமின்றி எடுத்துச் சொல்லவேண்டியது ஒரு பிரதிநிதிக்குள்ள கடமையல்லவா? தனக்கு சரியெனத் தோன்றும் திருத்தங்களையும் சபையில் தெரிவிக்க வேண்டியது பிரதிநிதியின் கடமையல்லவா? இதுதானே ஜனநாயகத்தின் ஜீவநாடி! உங்களுடையதைப்போன்ற செல்வாக்குள்ள பத்திரிகை பேராபத்து கரையில் குந்தி ஓலமிடும் பத்திரிகைகளின் நிலைக்கு இறங்கி பிரசாரம் செய்வது சரியல்ல. இப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுது நடைபெற்றிருப்பது ஜனநாயகமல்ல, மனிதனின் அடிப்படையான சுதந்திரத்தை மதித்து நடைபெற்ற செய்கையும் அல்ல, பிரிட்டிஷார் அனுட்டித்துவரும் சம்பிரதாயங்களுக்கு உகந்ததுமல்ல. பெரும்பான்மையோருடன் ஒத்துப் போவதென்ருல் எந்தவிதமான எதிர்ப்பும் தெரிவிக்காமல் அடங்கி ஒடுங்கிப் பதுங்கி இருக்கவேண்டியது தானே? தலையாட்டித்தம்பிரான்களை அதிகம் சேர்ப்பது தானே; இன்று பொதுஜனங்களின் மனது மாறும்படி இதுபோன்ற தவருன கருத்துக்கள் திரும்பத் திரும்ப பிரசாரம் செய்யப்படுகின்றன. இதே ரீதியில் பிரசாரம் நடந்து கொண்டு போகுமானல் இலங்கையின் வருங்கால அரசியல் ஏதேச்சாதிகாரத்தன்மையுடன் தான் விளங்கப் போகிறது. ஆனல் ஒரு வித்தியாசம் அந்த அரசியலுக்குமேல் ஜனநாயகச் சாயம் பூசப்பட்டிருக்கும். அடங்கியொடுங்கி பல் இளித்துக் கை தூக்கிக்கொண்டிருப்பது ஒத்துழைப்பாகாது.

இது என்ன ஐயா விபரீதம்! பிரிட்டிஷ் கெபினெட் ஒப்புக் கொண்டுவிட்டது; இனி விவாதத்திற்கு இடமில்லை விஷயம் முடிந்துபோனதே என்று எல்லாவற்றையும் முடித்துக் காட்டிப் பிரசாரம் செய்கிறீர்கள். திரு. சேனநாயகா திட்டவட்டமாக பேசிய பிரகாரம் "ஓர்டர் இன் கவுன்சிலும்" தொடரலாம். நீங்கள் சொல்வதைப் போன்று இது முடிவடைந்து போன விஷயமானல் இதுபற்றி விவாதம் செய்வது விந்தையிலும் விந்தையாக இருக்கவில்லையா? குடியேற்றநாட்டுக் காரியதரிசிதன துகுறிப்பில் "சபையில் அங்கத்தவர்கள் தெரிவிக்கும் திட்ட யோசனைகள் கவனிக்கப் படும்" என்று தெரிவித்திருக்க வேண்டியதில்லையே! இந்த முடிந்துபோன விஷயத்தைப் பற்றி (இந்தியர் விஷயத்தை எடுத்து விவாதிக்க) சர்வதேச புகழ் வாய்ந்த சர். இராமசாமி முதலியாருக்கு இந்திய சர்க்கார் தத்துவம் கொடுத்திருக்கவேண்டுவதில்லையே! ஜனநாயக பாராளுமன்ற சம்பிரதாயங்களை அறிந்தவர்கட்கு உங்களுடைய கூற்று "முதலையும் மூர்க்கனும் கொண்டதுவிடா" என்ற நாடோடிப் பழமொழியைத்தான் நினைப்பூட்டுகிறது. நீங்கள் கையாண்டுள்ள இரண்டாவது தவறுதல் என்னவென்ருல் விவாதத்தின் போக்கு சுற்றிச்சுயட்டி வர்ணித்திருக்கிறீர்கள். சிறுபான்மை அங்கத்தவர்கள் பேச்சுகளை பிரசுரித்திருப்பது பற்றியும் அதையொட்டி வெளி வந்துள்ள கடிதங்கள் போக்கு பற்றியும் மிகுந்த தவரான முடிவு ஏற்படக்கூடியதாகவிருக்கிறது. உண்மையை மறைத்து பொய்யை மெய்போல் காட்டுவதாகவிருக்கிறது உங்கள் பத்திரிகையிலும் பேராதரி பத்திரிகைகளிலும் வெளிவததுள்ள விஷயங்களை வைத்துக்கொண்டு பார்த்தால் அடியில் வருவது போன்ற வாசகங்களைக் கொண்ட தீர்மானம் திரு. சேனநாயகாவால் பிரரேபணை செய்யப்பட்டதாக தோற்றம் அளிக்கின்றது.

"சிறுபான்மையோரிடம் நல்லெண்ணத்தையும், தாராள மனப்பான்மை காட்டியும் கண்ணியத்துடனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்மையுடனும்" நடந்து கொள்ள திரு. சேனநாயகாவிடம் இச்சபை இலங்கைவாழ் அனைவருடைய அபிலாஷைகளைப் பூர்த்தி செய்து கூடிய விரைவில் குடியேற்ற நாட்டந்தஸ்து பெற உழைக்கும் காரணத்தால் தனது பூரா சம்மதத்தையும் ஒத்துழைப்பையும் அளிக்கின்றது."

தீர்மானம் இதுபோன்று இருக்குமானால் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் முதன்மையாக திரு. சேனநாயகாவுடன் ஒத்துழைக்க முன்வரும் ஆனால், சபையில நடநத விவாதம் இதற்கல்ல. வெள்ளை அறிக்கையை ஒப்புக்கொள்வதா? இல்லையா? என்பதுதான் பிரச்சனை. இந்த பிரச்சனையில் தமிழ் காங்கிரசிலிருந்து தள்ளுபட்ட மூன்று அரசாங்கசபை அங்கத்தவர்களும் இந்த விவாதத்திற்கு நான்கு நாளைக்கு முன்புதான் கொழும்பு நகரமண்டபத்தில் 1500க்கு அதிகமான சாட்சிகளுக்குமுன்னால் தீர்மானத்தை எதிர்க்கப் போவதாக சங்கநாதம் செய்தார்கள்.

## என்ன மாற்றம் கண்டு விட்டோம்

இந்த வெள்ளை அறிக்கையை ஒப்புக்கொண்டதினாலோ அல்லது கண்யமும், நேர்மையுமுடைய திரு. சேனநாயகாவின் தலைமையை ஒப்புக்கொண்டதாலோ இலங்கை மக்களுடைய நிலை எந்தவிதமான மாற்றத்தையும் அடைந்து விடவில்லை.

வெள்ளை அறிக்கையில் புதையுண்டுகிடக்கும் சுதந்தரம் பற்றி வானமளாவப் புகழப்படுகின்றது. அதை நிராகரித்தால் சுதந்தரத்திற்கு முட்டுக்கட்டை போடுவதாம். என்ன! இது முழுப் பூசனிக்காயைச் சோற்றில் மறைக்கக்கூடிய பொய் அல்லவா? இதையடுத்துத் தொடர்ச்சியாக எழுதும் வியாசத்தில் இதன் பூரா வண்டவாளத்தையும் விளக்கிக் காட்டுகின்றேன். இந்த வெள்ளை அறிக்கை அனுட்டானத்திற்கு வருவதன் மூலம்இலங்கைக்கு நான்குமகத்தான தீமைகள் சம்பவிக்க இருப்பது வெள்ளிடைமலை.

1 வெளிநாட்டு விவகாரத்தில் இதுகாறும் இல்லாதபடியாக பிரிட்டிஷ் ஏகாதிபத்ய நலனுக்கும் சலுகைகளுக்குமாக இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி பலியிடப்படக் கூடும்.

2 பிரிட்டிஷ் காபினட் முறையைப்போன்று இங்கு அமைக்கப்படும் மந்திரிசபை சர்வாதிகாரததன்மை வாய்ந்து உள்நாட்டு விஷயங்களில் ஏதேச்சாதிகார ஆட்சி நடத்தப்போகின்றது. இத்தகைய ஆட்சி முறையை சுயஆட்சியென்றோ? பொருப்பாட்சியென்றோ கூறுவதற்கில்லை. தங்கு தடையின்றி அதிகாரம் கிடைப்பதின்மூலம் தட்டிக்கேழ்க்க ஆள் இல்லாவிட்டால் தம்பி சண்டைப் பிசண்டன்என்ற ரீதியில்அதிகார துஷ்பிரயோகம் நடைபெறப் போகிறது.இத்துடன் ஒப்பிட்டு ஏகாதிபத்யத்திற்கு உட்பட்ட எந்த சுயஆட்சியுள்ள நாட்டையும் கூறுவதற்கில்லை.

3 இந்த வெள்ளை அறிக்கை சிபார்சுகள் அமுல் நடத்தத் தொடங்கிய நாள் தொடக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் இரண்டே கக்ஷிகள்தான் இருக்கும். 1 ஆளும் வர்க்கத்தைசசேர்ந்த பெரும்பான்மைக கட்சி, 2 அடிமைப்பட்டுக் கிடக்கும் சிறுபான்மைக் கட்சி.

4 ஒப்புக்கொள்ளப்பட்ட வெள்ளை அறிக்கைகளின் சிபார்சுகளின்படி இலங்கை என்றும் பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தின் தாசானு தாசனுகவே இருக்க வேண்டிவரும். தென் கிழக்கு ஆசியா அதிகாரத்திற்கு இலங்கை என்றும் கட்டுப்பட்டுக் கிடக்கவேண்டியதுதான். இங்கு கூறப்படும் தேசிய அரசாட்சி அதிகாரம் ஏனைய ஆசிய நாடுகளுக்குக் கட்டுப்பாடு விதிக்க உபயோகிக்கும் கட்டாயப்படுத்துவதற்குத்தானே ஒழிய வேறல்ல.

இதுபோன்ற சிபார்சுகள் இலங்கைக்கு எந்தக் காலத்திலும் நலம் பயக்கக்கூடியதில்லை. அதிகாரம் பிரிட்டிஷாரிடமும் செயலுக்கு பொறுப்பாளியாக இலங்கையையும் உட்படுத்தப்போவது வெள்ளிடைமலை.

## இலங்கை பகீரதன் கொண்டுவந்த கங்கை

வெள்ளை அறிக்கை இலங்கை மக்களுக்கு அளித்திருப்பது நால்வகை ஜனநாயக சுதந்தரமல்ல, ஆனால் அடிமைதனத்தை சாச்வதப்படுத்த வந்துள்ள நால்வகை எதேச்சாதிகார ஆதிக்கங்கள். இதைத் திரு. சேனநாயா சுதந்தரசாசனம் என்று வாய்வீச்சு வீசுகிறார். இந்தியச் சிறுக் கடலையும் சுற்றிலுமுள்ள பரந்த வெட்ட வெளிகளையும் தனது ஆதிக்கத்தில் வைத்துக் கொள்வதற்காக இலங்கைத் துறைமுகங்களையும் ஆகாய விமானத் தளங்களையும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குக் கப்பமாகக் கொடுத்துவிட்டார். இன்னும் திரு. சேனநாயகா சொல்லுகின்றார் "எங்களை முற்றுக நம்புங்கள் உள்நாட்டுவிஷய சீர்திருத்தங்களில் எங்களைத் தடைப்படுத்தாதீர்கள் உங்களுக்குக் கொடுத்துள்ள வாக்குறுதிகளைப் பூர்த்திசெய்கிறோம்" என்று கோஷிக்கின்றார். இன்னும் அவர் தொடர்ந்து சொல்லுகிறார். "மன்னர் சர்க்கார் இன்னும் எங்களை நம்பமுடியாதிருந்தால் ஒரு பாதுகாப்புடன் சுய ஆட்சியைக் கொடுத்துப் பாருங்கள். ஒப்பந்த ஷரத்துக்களை பூர்த்திசெய்யக் குந்தகம் ஏற்பட்டால் திரும்ப எடுத்துக் கொள்ளட்டும்" என்கிறார். ஆகவே எங்களுடைய சுதந்தரம் இதுதான். குடியேற்றநாட்டந்தஸ்துடன் இருந்துவருகிற ஆஸ்திரேலியா பிரதமரோ அல்லது நியூஜிலாந்து பிரதமரோ திரு. சேனநாயகா பேசியிருப்பது போன்று ஒப்பந்தத்தை நிறைவேற்றுவிடில் சுய ஆட்சியை ரத்து செய்துவிட வாக்குறுதி கொடுத்துப் பேசுவார்களா? ஏகாதிபத்திய சலுகைகளுக்கும், நலன்களுக்கும் உள்நாட்டு சுதந்தரத்தை பலியிடச் சம்மதிப்பார்களா? திரு. சேனநாயகா தனக்காகவும், சமயமுள்ளபோதெல்லாம் இவரைச் சார்ந்து பந்தங்கள் பிடித்துவருகிற இவரது இனஜனக் கும்பலுக்காகவுமே சுய ஆட்சி கேட்கிறாரே தவிர இத்தீவின் நலனுக்கும் சுபீட்சத்திற்காகவுமல்ல. சுய ஆட்சி என்பதற்கு திரு. சேன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயகாவின் வியாக்யானம் இது தான் "தறபொழுதுள்ள சிங்களத் தலைவர்களுக்கு பரிபூரண அதிகாரங்கள் கொடுத்து ஏனையமக்களைத் தன் ஆதிக்கத்தின் மூலம் ஆட்சிசெய்யச் சொல்வதுதான். இது கிடைத்துவிட்டால் இலங்கையின் சுபீட்சம் பற்றியோ அல்லது இத்தீவின் வரும்கால க்ஷேமாபிவிருத்திகள் பற்றியோ இவருக்கு எவ்விதமான கவலையும் இருக்கத் தேவையில்லை அல்லவா? நாட்டு நலன் பற்றிய எந்த விதமான ஒப்பந்தங்கள் செய்துகொண்ட போதிலும் இந்நாட்டு மக்களுடைய அபிப்பிராயங்கள் முதற்பட்சமானதல்ல என்பது இவரதுசித்தாந்தம். இவர் மேற்சொல்லிய சித்தாந்தத்தைக் கொண்டிராதவராக விருந்தால் இவர் மட்டும் தனித்து ஏன் குடியேற்றுநாட்டுக் காரியாலயத்தாருடன் பேசி முடித்துக்கொள்ள வேண்டும்?

## கைப் புண்ணுக்குக் கண்ணாடியா?

நிதானத்துடன் சோல்பரி யாதாஸ்தையும் வெள்ளை அறிக்கை சிபார்சுகளையும் படித்துப் பார்ப்பவர்களுக்கு நான் இதுகாறும் சொல்லிவந்த விஷயங்கள் நன்றாகப் புலப்படும். என்னால் கூடியவிரைவில் வெளியிடப்படும் "சோல்பரிமீது தீர்ப்பு" என்ற புத்தகத்தில் எவ்வித சந்தேகத்திற்கும் இடமில்லாதபடி இந்த யாதாஸ்திலும் அறிக்கையிலும் காணப்படும் அபத்தங்களையும், முரண்பட்ட செய்திகளையும், வெட்ட வெளிச்சமான பெரும் பிழைகளையும் எடுத்துக் காட்டுவேன். மயங்க வைக்கக்கூடிய பிரச்சனைகளுக்கு யுக்தி அனுபவமற்ற பதில்கள் மேற்படி யாதாஸ்திலும் அறிக்கையிலும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

இதுபோன்று அபத்தக்களஞ்சியமாக விளங்கும் ஒரு ஆதாரத்தை அஸ்திவாரமாகக் கொண்டு அமையப்போகிற ஆட்சிமுறையை பொதுஜனம் ஒருபோதும் ஏற்காது. தேசிய நாசத்தைக் கொடுக்கப்போகிற இந்த ஆட்சிமுறை சட்டமானாலும் அமுல் நடத்தவிட முடியாது. உள்நாட்டு விவகாரங்களில் பூரண சுதந்தரமளித்திருக்கும் ஒரு ஆட்சிமுறையை அளிக்கும் காலத்தில் நாட்டின் பலதிரப்பட்ட சமூகப் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசித்தல்லவா முடிவு செய்யப்பட வேண்டும். அப்போதுதான் ஜனங்கள்கூடி ஜன நன்மைக்காக ஜனநாயக ஆட்சி செலுத்துகிறார்கள் என்பதற்கு அர்த்தம் இருக்கமுடியும்.

"நல்லெண்ணம்" என்று சதா கூறப்படுகிறதே அது பற்றியும் சில வார்த்தைகள் கூற விரும்புகின்றேன். உண்மை சுதந்தரத்திற்கும் நேரிய ஜனநாயகத்திற்கும் சேவை செய்து வருகிற தமிழ் காங்கிரஸ் உத்தியோகஸ்தர்கள் அவர்களது பணியை ஆற்றாதிருக்கச் செய்ய முயற்சிகள் பல நடந்தன. இன்று "டெய்லி நியூசிலும்" பிற பத்திரிகைகளிலும் எழுதித் தள்ளுகின்ற தமிழ் வீரர் குழுவினர் தமிழ் காங்கிரசிற்கேற்பட்ட தோல்வியையும் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு இனி வரப்போகும் அரசியலில் எஜமானர்களாக வரவிருக்கும் சிங்களவர்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்தி செய்து மகிழ்விக்க வேண்டுமென உபதேசம் செய்கிறார்கள். இப்படிச் செய்வது தான் தமிழர்களின் பிற்காலப் பாதுகாப்பிற்கு உகந்த செய்கை என்றும் சொல்லுகிறார்கள்

இதுபோன்ற வாதங்கள் தான் அரசாங்க சபையில் இருந்து வரும் தமிழ் பிரதிநிதிகளை வெள்ளை அறிக்கைக்குச் சாதகமாக வாக்களிக்கத் தூண்டியது. இப்படிச்சதி செய்தால் சிங்களவரும் சேனநாயகா குழுவினரும் பேராதத்துப் பத்திரிகைகளும் தங்களை சிலாகிக்கும் என்று எண்ணினார்கள். அடியோடு மண்டியிட்டு சரணாகதியடைந்த இந்த பிரகஸ்பதிகள் "நல்லெண்ணம்" என்ற பாட்டிற்கு இசை கூட்டுகின்றவர்களாக விருக்கிறார்கள்.

எனக்கு சிங்கள மகாஜனங்களிடத்தில் பரிபூரணமான நம்பிக்கையையும் விசுவாசமும் உண்டு. தமிழர்களைப் போலும் சிங்களவர்கள் தர்மசிந்தையையும் பரோபகாரமான குணங்களும் உடையவர் என்பதை நான் பலமுறை தனித்து சம்பாஷிக்க நேரும் காலங்களிலும், பொது மேடைகளில் பேசும் சந்தர்ப்பங்களிலும் தெரிவித்துள்ளேன். ஆனால் தமிழ் சாதியார் வருங்காலங்களில் சிங்களவர்களை அண்டி அவர்கள் நல்லெண்ணத்தினால் இருந்துவர வேண்டுமென்றால் இது சுயமரியாதைக்குப் பங்கம் விளைவிக்கும் அவச்சொல். இப்படிப்பட்ட ஒருநிலையை மனக்கண்ணால் கண்டு ஒரு கண்ணியமான மனிதன் சகித்திருக்க முடியாது, ஆனால் இப்படிப்பட்ட நிலையை தமிழனுக்கு உண்டுபண்ண சோல்பரி யாதாஸ்தும், வெள்ளை அறிக்கையும் திரு. சேனநாயகாவின் ராஜதந்திரமிக்க பேச்சும் முடிவு செய்து விட்டிருக்கிறது.

ஏற்கனவே நான் விவரித்தபடி தென் ஆப்பிரிக்காவிற்கு பரிபூரண சுதந்தரமளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்நாட்டு மக்களுள் ஒருசமூகம் மட்டுமே சுதந்தரத்தை அனுபவிக்கின்றது. ஏனையசமூகங்கள் ஆட்சி செய்யும்சமூகத்தை அனுசரித்துவாழ வேண்டி நேர்ந்திருக்கிறது. பிரதிநிதித்துவமற்ற சுதேச மக்களுடைய நலஉரிமைகளைக் கண்காணிப்பதற்காக அம்மக்களின் விஷயமறிந்ததாகச் சொல்லப்படும் 6 பேர்களை கவர்னர் ஜெனரல் நியமிக்கின்றார். அவர்கள் நலஉரிமைகள் கவனத்தில் வைக்கப்பட்டு சலுகைகளும் காட்டப்படுகிறது. மேல் விவரித்த நோக்கங்களே சோல்பரிக் கமிஷனர்கள் சிபார்சுகளிலும் சிறுபான்மையோர் சம்பந்தப்பட்டவரை பிரதிபலிக்கின்றது. சோல்பரி யாதாஸ்தில் 188-வது பாராவில் அவர்கள் தெரிவிப்பதாவது "இலங்கை அரசியல் அமைப்பில் முக்கியமாக சிறுபான்மையோருடைய பிரச்னைகள் போதுமானபடி அன்றாட அலுவல்களில் கவனிக்கப்பட வேண்டியிருக்கிறது" இலங்கையிலுள்ள சிறுபான்மையோர்களும் அவர்களுக்கு அன்றாட அலுவல்களை பரிசீலனை செய்ய வாக்கு இருக்கவேண்டுமென்று தான் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். பங்கு (Share) என்ற சொல்லுக்குப் பதிலாக வாக்கு (Voice) என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதற்கு அவர்கள் தெரிவித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ள்ள வியாக்யானம் வருமாறு:— "ஆட்சி முறையில் அவர்களுடைய கோரிக்கைகள் சதா பிரதிபலிப்பதற்கும் அவர்கள் உரிமைகள் சித்தியடைவதற்கு கவனிக்கப்படுவதற்கும்"

இதிலிருந்து எல்லா சிறுபான்மையோர்களும் தெரிந்துகொள்ள வேண்டியது இதுதான். சிறுபான்மையோர்களுக்கு நாட்டின் ஆட்சி முறையில் பங்கு கிடையாது. ஆனால் அவர்களது "வாக்கும் ஆட்சிமுறையில் பிரதிபலிக்கக் கூடியதாகவிருக்க சந்தர்ப்பமிருக்கும். அதே யாதாஸ்தில் மற்றொரு பகுதியில் கமிஷனர்கள் அடியில் வருமாறு தெரிவிக்கின்றார்கள். "சிறுபான்மையோர்களுடைய நலஉரிமைகளைப் பாதுகாப்பது அவர்களது நன்மைக்கு மட்டுமல்லாமல் இத்தீவின் நலன்களுக்கே உகந்ததாகவிருக்கும் என்பது இலங்கை அரசாங்கம் நன்றாக உணர்ந்திருக்கிறது. சோல்பரிக் கமிஷனர்கள் "அரசாங்கம்" "ஆட்சிமுறை" என்ற சொற்றொடர்களை உபயோகிக்கும் காலத்து பெரும்பாலோரான சமூகத்தைத்தான் குறிப்பிட்டிருக்கின்றார்கள் என்பதை சிறுபான்மை சமூகத் தலைவர்கள் ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும்.

## முற்றிலும் தாழ்த்தப்பட்ட நிலைமை

1945-ம் ஆண்டு மேமாதம் வாக்களிக்கப்பட்டிருந்த உள்நாட்டு சுதந்தரப் பிரகடனப்படிக்குள்ள பொறுப்புகள் யாவும் சிறுபான்மையோர்களுக்கு அல்ல என்பதே சோல்பரிக் கமிஷனர்கள் கொண்ட அபிப்பிராயமாகும். இதை அடிப்படையாக வைத்துக்கொண்டுதான் அவர்கள் யாதாஸ்து தயார் செய்திருக்கின்றார்கள்.

**இப்படிப்பட்ட நிலையில் முழுப் பொறுப்பாட்சி இலங்கைக்கு வழங்கப்பட்ட போதிலும் சிறுபான்மையோர்களுடைய நிலைமை தென் ஆப்பிரிக்காவில் ஐரோப்பியர் அல்லாதவர்களின் நிலைக்கு எவ்விதத்திலும் சரி, நிகர், சமமாகவிருக்கப்போகிறது. இதில் யாரேனும் சம்சயம் கொள்ளக் கூடுமா? நிச்சயமாகச் சொல்லுகின்றேன். பெரும்பான்மை சமூகத்திற்கு முற்றிலும் தாழ்த்தப்பட்ட நிலைதான் சிறுபான்மையோர்களுக்கு என்பது வெளிப்படை.**

சோல்பரி கமிஷனர்களின் பரிசுத்தமான நோக்கங்கள் ஈடேறி வருகின்றன என்பதை அழுத்தம் திருத்தமாக கூறுவேன். அவர்களுடைய உபதேச மொழிகளை பெரும்பான்மை சமூகத்தவர்களும் சிறுபான்மையோர்களும் கேட்டு நடக்கின்றார்கள். இதன்படி தாராள நோக்குடைய சிங்களவ ஆட்சி கிடைக்க எதிர்பார்க்கலாம்! **எந்தக் காலத்திலும் சுய ஆட்சியோ அல்லது பூரண சுதந்திரமோ கிடைக்கப் போவதில்லை.**

எவ்வளவுதான் ஹிதோபதேசங்கள் செய்தபோதிலும், எவ்வளவுதான் பயமுறுத்தல் சூழ்ச்சிகளைக் கையாண்டபோதிலும் இந்த மானக்கேடான சரணாகதிக்கு தமிழ் காங்கிரஸ் உட்படப் போவதில்லை. சிங்களவர்கள் நல்லெண்ணம் என்ற ஒன்றிக்காக உரிமைகளைப் பறிகொடுத்து உறவு கொண்டாட முடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாது. பேராபத்தை பத்ரிகையும் தேசியத் தமிழர்களின் கூட்டுறவும் இதை பாதிக்க முடியாது.

சிங்களவர்கள் கண்யமும் கௌரவமும் உடையவர்கள் என்பதை நான் மறுக்கவில்லை. அவர்களில் பெரும்பாலோருக்குத் தமிழர்களை அடக்கியாள வேண்டுமென்ற எண்ணமும் கிடையாது. அவர்களும் இந்தத் தீவின் ஏனைய மக்களுடன் சௌஜன்யமாக வாழவேண்டுமென்பதைத்தான் விருப்பமாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். நாம் சிங்களவர் ஆதிக்கம் என்று குறிப்பிடும் காலத்தில் இவர்கள் மனம் நோகிறார்கள்.

இந்த நல்ல மனிதர்களுக்கு நான் சொல்வது என்னவென்றால் இப்படி வந்தால் அது அவர்களுடைய பிழை அல்ல, நம் மீது திணிக்கப்பட்டிருக்கும் சோல்பரி யாதாஸ்துதான் காரணம். இதை ஊர்ஜிதப்படுத்த அரசாங்க சபை வெள்ளை அறிக்கைச் சிபார்சுகளை ஒப்புக்கொண்டிருக்கிறது.

உதாரணமாகச் சொல்லுகின்றேன். பிரிட்டிஷார் நல்ல மனிதர்கள், சுதந்தரப் பிரியர்கள், ஏனையோர்கள், இழந்த சுதந்தரத்தை மீட்டுக்கொடுக்க இரத்தம் சிந்தி உயிர்விட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பிரஜைகளாக விருக்கிற படியால் அவர்கள் நம்மீது ஆதிக்கம் செலுத்துகின்றார்கள். இலங்கையில் டொனமூர் சீர்திருத்தங்கள் அமுலுக்கு வருவதற்கு முன்னால் சிங்களவர்கள் [illegible] கம் செலுத்தமுடியாது, செலுத்தவுமில்லை.

இப்பொழுதுள்ள சிங்களத் தலைவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள ஆட்சி முறையின் பிரகாரம் அவர்களால் ஆதிக்கம் செலுத்தாதிருக்க முடியாது. இதுதான் உண்மை. தமிழர்கள் தேசியப் போர்வையை போர்த்திக்கொண்டு நல்லுறவு ஏற்படுத்துவதாகச் சொல்வது வீண் பிரமை. அரசியல் சூழ்ச்சி. இப்படிப்பட்ட தமிழர்கள் தங்களையே ஏமாற்றிக் கொள்ளுகிறார்கள். வால் இழந்த நரி சுவர்க்கம் தெரிகிறதாகச் சொன்ன கதைதான் இவர்களுடைய பசப்பு வார்த்தைகளுமிருக்கிறது. உள்ள விஷயங்களை நன்கு ஆராய்ந்து கண்யமான முடிவு செய்யப்பட வேண்டும். எந்தக் காலத்திலும் சிங்களவர்கள் ஏகோபித்துத்தான் வாக்குக் கொடுப்பார்கள் என்று சொல்வதில் சம்சயப்பட்டவர்கள் சோல்பரி யாதாஸ்து வெள்ளை அறிக்கை வாக்கெடுப்பில் தெரிந்துகொண்டிருக்கலாம். சோல்பரி யாதாஸ்து, வெள்ளை அறிக்கை ஆகிய இரண்டு அணுகுண்டுகளும் சிறுபான்மையோர்களின் ஒற்றுமையையும் சீர்குலைத்துவிட்டது. இத்துடன் சிங்களவர்களின் ஆதிக்கம் என்றும் நிலைத்திருக்கும் என்ற எண்ணமும் வலுப்பட்டு அதனால் ஏற்பட்ட பயம் சிங்கள மகாஜனங்களுடன் சேர்வது என்ற நல்லெண்ணப் பேச்சுகள் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

### இது என்ன மானக்கேடு

வெள்ளை அறிக்கையை எதிர்த்துப் பேச இலங்கைத் தமிழன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவரில்லாதுபோனது பிற்கால சரித்திரத்தில் எழுதப்படப்போகும் மானக்கேடான வாக்கியம். ஒரு இலங்கைத் தமிழனுக்கும் இதற்கு தைரியம் இல்லாதுபோய் விட்டதே. கண்டனம் தெரிவித்திருந்தால் பலாபலன் எப்படி இருக்குமோ என்று பயமா? சிங்கள அரசியல் வாதிகளைத் திருப்தி செய்யத் தங்களுடைய திட்டம், கொள்கை, உரிமை யாவையும் பறிகொடுத்து விட்டார்களே! சுயமரியாதையையும் கௌரவத்தையும் கூட அல்லவா? இழந்துவிட்டார்கள். ஒரு முஸ்லீம் நியமனப் பிரதிநிதி பேசியிருப்பது மிக மிக மானக்கேடாக விருக்கிறது.

தமிழ்ப் பிரதிநிதிகள் சிங்களவர் நல்லெண்ணத்தைப் பெறத் தாழ்ந்து பணிந்து மண்டியிட்டது இவர்கள்மீது சிங்களவர்களுக்கு வெறுப்புத்தான் ஏற்படுத்தியது. வெள்ளை அறிக்கை வாக்கெடுப்பு முடிந்தபின்னர், தமிழ் அங்கத்தவர்கள் காலில்படும்படியாகவே திரு. பண்டாரநாயகா தெரிவிக்கின்ருர்.

[illegible]ன் தமிழ் காங்கிரசிற்கு [illegible]மானவன்தான். இருந்[illegible]ல் கட்சி அங்கத்தவர் [illegible]துகொண்ட மாதிரி [illegible]ாழ்வின் நேர்மையை [illegible]கொண்ட கொள்கையில் பற்றுதலையும் முற்றாகப் புறக்கணிக்கக்கூடியதாக விருக்கிறது. இந்த அருவருக்கத்தக்க காட்சியைக் காணச் சங்கடமாகத்தான் இருக்கிறது, என்ருர். மற்றொரு முக்கியமான சிங்களத் தலைவர் தெரிவித்தார் "உங்கள் கட்சி ஆட்கள் எங்கள் நல்லெண்ணத்தைப் பெறக் கையாண்ட சூழ்ச்சி அவர்கள்பால் எங்களுக்கு அலட்சிய மனப்பான்மை ஏற்படத்தான் ஏதுவாயிற்று"

பூரா விவகாரங்களையும் நான் உங்களுக்கு எடுத்துச் சொல்லி விட்டேன். மூன்று அங்கத்தவர்கள் செய்கையைப்பற்றி இனியேனும் உங்கள் அபிப்பிராயங்களை மாற்றிக்கொள்வீர் என்று எதிர்பார்க்கிறேன்.

தமிழ் காங்கிரசின் கொள்கையான ஒரு சாதியார் ஏனைய சாதியாரை அமுக்கி ஆதிக்கம் செலுத்த முடியாத சமபலப் பிரதிநிதித்துவக் கொள்கை இப்பொழுதுதான் அவசியமாகத் தேவைப்படுகிறது. எது நேரினும் இடர்படாது தமிழ் காங்கிரஸ் வாழ, வளர, ஓங்க உயர தீரத்துடன் தன்நம்பிக்கையுடன் முன்னேறுவோம்.

தமிழ் மக்கள் ஒருதலைப் பக்ஷமாகப் பிரசாரங்கள் நடப்பதைக் கண்டு பயம் கொள்ள வேண்டாம். எல்லாம் மீறிவிட்டதென்ற எண்ணமும் வேண்டாம். தமிழ்க் காங்கிரஸ் கொண்ட கொள்கை சத்தியக் கொள்கை. சத்யம் நித்யமானது. அதை அசைக்க முடியாது. ஆகவே எல்லாத் தமிழர்களும் ஒற்றுமைப்பட்டுழைத்தால் கைகூடாமற் போகாது.

## செய்யவேண்டியது என்ன ?

அப்படியானால் செய்யவேண்டியதென்ன ? சும்மாவிருந்து வீட்டில் படுத்துறங்குவதல்ல. எல்லாம் போய்விட்டதென்று பெரும்பான்மையோருக்கு அடிமையாவதல்ல. எல்லாத் தமிழர்களும் தங்கள் உறக்கத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளின்றும் எழுந்து, அரசியல், பொருளாதார, தமிழ்க் கலை விஷயங்களில் ஆர்வம் கொண்டு பங்கு ஏற்க வேண்டும். அப்பொழுதுதான் எதிர் காலத்தில் நம் மக்களுக்கு ஏற்படக்கூடிய கஷ்ட நஷ்டங்களைத் தடுத்து தமிழ்ச் சந்ததியார், மரியாதையுடனும், நன்மதிப்புடனும், வாழ்வதற்கு இடம் ஏற்படும். அதற்காகத் தமிழ்க் காங்கிரஸில் ஒவ்வொரு தமிழனையும் அங்கத்தவராகச் சேர்த்தும், அதற்கு உதவிபுரிய பலவாலண்டியர்களும் முன் வரவேண்டும். பொருள் இல்லாமல் எக்காரியமும் முடியாது. அதற்கு பொருள் சேர்த்து, தமிழ்க் காங்கிரஸின் கொள்கை ஒவ்வொரு தமிழனும் உணர்ந்து அதன்படி அவர்கள் நடக்கும்படிக்கும் பிரசாரம் செய்ய வேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் தமிழ்க் காங்கிரஸ் ஸ்தாபனம் ஏற்பட வேண்டும். தமிழர்களுக்குத் துரோகம்பண்ணியவர்களைப் புறக்கணிக்க வேண்டும். இலங்கைத் தமிழரில் தமிழ்க் காங்கிரஸ் அல்லாதவன் இல்லை என்ற முறையில் காரியங்கள் செய்யவேண்டும். வரப்போகும் தேர்தலில் தமிழ்க் காங்கிரஸ் அங்கத்தவரும், அவர்களுடைய அனுமதியும் பெற்றவர்கள்தான் போக வேண்டும் என்ற திட்டத்தோடு வேலை செய்து அதை நிறைவேற்ற வேண்டும். தமிழர்கள் ஓர்முகமாய் உழைத்தால் அவர்களை அடக்கி அடிமையாக்குவது ஒருவராலும் முடியாது. இதுவே சத்தியம்.

INDRAPALA COLLECTION

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org